பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சிப்காட் செய்யாறு தொழில் வளாக விரிவாக்கத் திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் வகையில், கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட திருவண்ணாமலை மாவட்டம் முழுமையாக தொழில் தேவைக்குண்டான மனைத் தேவையினை முழுமையாகப் பூர்த்தி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

85—

புதிய மாவட்டம்

***2398 திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே வருவாய்த் துறை நிலை ஆணையின்கீழ், புதிய மாவட்டம் அமைப்பதற்கென தனியாக, மக்கள் தொகை, வருவாய் கிராமங்கள், பரப்பளவு ஆகியவை எவ்வளவு இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்பதையும், இது அரசின் கொள்கை முடிவு என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

86—

மாணவர் விடுதி

***2100 திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பழவூரில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அம்மா, தினம், தினம் வழங்கும் 110 ஆல், எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் போட்டது 111; வாக்களித்த மக்கள் கையில் வைக்கப்பட்ட மை காய்வதற்குள் தமிழனின் தலையெழுத்தை மாற்றிட வந்த மை, அம்மாவின் பேனா மை என்பதைத் தெரிவித்து, தெய்வத் திருமகள் எங்கள் அம்மா அவர்களின் திருவடி வணங்கி, என்னுடைய திருத்திய பதிலை அளிக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 72 விடுதிகள் இயங்கி வருகின்றன. அதில், குறிப்பாக, ராதாபுரம் தொகுதியில் 3 பள்ளி மாணவர் விடுதிகளும், 5 மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. எனவே, தற்போதைய சூழ்நிலையில், ராதாபுரம் தொகுதி, பழவூரில் மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*